கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 164/2012

வாதி தரப்பு சாட்சி – 3 செல்வம் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 11.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அரசு அதிகாரிகளை தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்ப்பதற்கு முன்னர் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ராஜாமணி பெயரில் இருந்த பட்டாவை வெள்ளைச்சாமி பெயருக்கு கடந்த 2015 ல் மாற்றம் செய்து கொடுத்துவிட்டார்கள். இவ்வழக்கிற்கு பின்னிட்டு மேற்படி பட்டா மாற்றம் செய்யப்பட்டதா என்றால் சரிதான்.

2. மேற்படி பட்டா மாற்றியது சம்மந்தமாக வருவாய் துறையினர் மீது மேல்முறையீடு செய்தோமா என்றால் செய்தோம். மேற்படி மேல்முறையீடு தற்போது நிலுவையில் தான் உள்ளது. ஏன் இதுவரை நிலுவையில் உள்ளது என்று மனு ஏதேனும் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். வாரிசு சான்றிதழ் யார் பெயரில் இருக்கிறதோ அவர்கள் பெயரில் பட்டா தருவதாக கூறி மேல்முறையீட்டை நிலுவையில் வைத்துள்ளார்கள். இது சம்மந்தமாக எழுத்துபூர்வ உத்தரவு வருவாய் துறையினரால் போடப்பட்டதா என்றால் இல்லை.

3. வருவாய் துறையில் முறைப்படி உரிய ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் சட்டத்திற்குட்பட்டு பட்டா பெயர் மாற்றம் செய்ய அவர்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். அதில் ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்ய வருவாய் துறையினரிடம் மேல்முறையீடு செய்து சரி செய்து கொள்ள முடியும் என்றால் சரியல்ல. வருவாய் துறையினருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. வருவாய் துறையினர் சட்டத்திற்குட்பட்டு தங்கள் கடமைகளை செய்து

வருகிறார்கள் என்றால் சரிதான். அரசு அதிகாரிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும், அவர்களை பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2025.11.11 17:47:07 +0530

**Additional District Munsif,**
**Kulithalai.**